### வண்ணாரப்பேட்டை- விம்கோநகர் இடையே

# மெட்ரோ ரெயில் தண்டவாளம் அமைக்கும் பணி இந்த ஆண்டில் முடிவடையும்

## 2020-ம் ஆண்டு போக்குவரத்து தொடங்கும்

சென்னை, ஜூலை.31–

வண்ணாரப்பேட்டை– விம்கோ நகர் இடையே மெட்ரோ ரெயிலுக்காக தண்டவாளம் அமைக்கும் பணி இந்த ஆண்டு நிறைவடையும். அடுத்த ஆண்டு (2020) ஜூன் மாதம் பொது மக்கள் பயன்பாட்டுக்கு மெட்ரோ ரெயில் போக்குவரத்து தொடங்கும் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

### வண்ணாரப்பேட்டை- விம்கோநகர்

சென்னையில் வண்ணாரப்பேட்டை– விமானநிலையம் மற்றும் சென்டிரல் ரெயில் நிலையம்– பரங்கிமலை வரையிலும் மொத்தம் 45.1 கி.மீ. தூரம் முதல் கட்ட மெட்ரோ ரெயில் திட்டம் முழுமை பெற்று தற்போது ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதைத்தொடர்ந்து, 2–ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்திற்கான மண் உறுதித்தன்மை குறித்த தர பரிசோதனைகள் மற்றும் நில ஆர்ஜிதம் உள்ளிட்ட பணிகளை மெட்ரோ ரெயில் நிர்வாகம் 60 சதவீதம் முடித்து விட்டனர்.

இந்த நிலையில், முதல் வழித்தட திட்டத்தின் நீட்டிப்பான வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான பணிகளில் தற்போது மெட்ரோ ரெயில் நிர்வாகம் வேகமாக ஈடுபட்டு வருகிறது. மேம்பாலம் வழியாக 9.2 கி.மீ. தூரத்திற்கு விம்கோ நகர் வரை நடைபெறும் இப்பணியை விரைவில் முடிக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

### பொதுமக்கள் பயன்பாட்டுக்கு

இதில் சுரங்கப்பாதையிலும், உயர்மட்ட பாதையிலும் ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சுரங்கப்பாதையில் 1.8 கி.மீ. தூரத்தில் வண்ணாரப்பேட்டை, தியாகராயர்கல்லூரி, கொருக்குப்பேட்டை ஆகிய 3 ரெயில் நிலையங்களுக்கான கட்டுமானப்பணிகள் நிறைவடைந்து உள்ளன.

உயர்மட்ட பாதையில் தண்டையார்பேட்டை, டோல் கேட், தாங்கல், கவுரி ஆசிரமம், திருவொற்றியூர், விம்கோ நகர் ஆகிய 6 ரெயில் நிலையங்களுக்கான கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. வண்ணாரப்பேட்டை– விம்கோ நகர் இடையேயான மெட்ரோ ரெயிலுக்கான உயர்மட்டப் பாதைகளுக்கான கட்டுமானப்பணிகள் பெருமளவில் முடிந்துள்ளன.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

### ஜூன் மாதம் சேவை

வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை மெட்ரோ ரெயில் பாதை நீட்டிப்பு பணிகள் ரூ.3,770 கோடியில் நடந்து வருகின்றன. பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. அடுத்த ஆண்டு (2020) மே மாதத்திற்குள் பணிகளை முடித்து ஜூன் மாதத்தில் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட உள்ளது.

கடந்த ஆண்டு தொடக்கத்தில் சுரங்கப்பாதை பணிகள் முடிந்தன. தொடர்ந்து சுரங்கப்பாதையில் உள்ள 2 ரெயில் நிலையங்கள் உள்ளிட்ட பணிகள் நடந்து வருகின்றன. அவற்றில் தண்டவாளம் அமைக்கும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளன. உயர்மட்ட பாதையில் 1½ கி.மீ. தண்டவாளம் அமைக்கும் பணி ஆகஸ்டு 19–ந்தேதி தொடங்கி இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வண்ணாரப்பேட்டையில் இருந்து விம்கோ நகர் வரை மெட்ரோ ரெயில் சேவைக்கான பணிகள் முடிந்தவுடன் அங்கிருந்து விமான நிலையத்துக்கு நேரடியாக ரெயில்கள் இயக்கப்படும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.